# தந்தி

இல: 1097 | 1970 ஆகஸ்ட் 2 ஞாயிற்றுக்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

### புதுமணத் தம்பதிகள் உட்பட விருந்தினர்கள் நிலை கவலைக்கிடம்:

# உணவு நஞ்சாகியதால் 35 பேர் ஆஸ்பத்திரியில்

**விஷம் கலந்த உணவைச் சாப்பிட்டதால் புதுமணத் தம்பதிகள் உட்பட 20 பேர் ஹொரணை ஆஸ்பத்திரியிலும், 15 பேர் மாத்தளை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.**

ஹந்தபான்கொடையில் ஒரு வீட்டில் நடைபெற்ற வைபவத்தில் தற்செயலாக விஷம் கலந்த உணவைச் சாப்பிட்டதால் புதுமணத் தம்பதிகள் உட்பட இருபது பேர் கவலைக்கிடமான நிலையில் ஹொரணை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 14 பேர் ஆண்கள். 6 பேர் பெண்கள்.

விருந்து மேசையில் ஒரே ஆகாரத்தை உட்கொண்ட இந்த இருபது பேருக்கும் ஏககாலத்தில் வாந்தி பேதியும் தேகத்தில் நடுக்கமும் ஏற்பட்டுள்ளது.

மணமகன் ஹோமகம இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த ஒரு சாரதியாவார்.

### மாத்தளையில் பதினைந்துபேர்

மாத்தளையில் ஒரு பிரபல வர்த்தக நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களில் ஒரு பகுதியினர் உணவில் நஞ்சுகலந்ததால் வாந்தி பேதி ஏற்பட்டு மாத்தளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மாத்தளைப் பகுதியில் பெரும் பரபரப்பையுண்டாக்கியது.

இவர்களில் மாத்தளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 15 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

உணவில் சேர்க்கப்பட்ட ஒருவகை மீன் நஞ்சானதின் எதிரொலியாகவே வாந்தி, பேதி ஏற்பட்டு உள்ளதாக சம்பந்தப்பட்ட வர்த்தக நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையில் உணவு விற்பனை செய்யப்பட்டது சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்துவதற்கு மாத்தளை அரசாங்க அதிபர் திரு. எச். ஏ. பி. அபேவர்தன நடவடிக்கையெடுத்துள்ளார்.

மாத்தளை பொலீஸாரும் புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

### "சேகுவேரா" நால்வர் கைது

"ஷே குவேரா" நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வரை மாவநல்லை பொலீஸார் கைது செய்தனர்.

மாத்தறை, பெங்கமுவ என்னுமிடத்திலுள்ள தேயிலைத் தோட்டமொன்றில், இரகசியக் கூட்டம் நடத்திய போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

களவுபோன சைக்கிள் ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். (15)

### மீனாட்சி



என்னுங்க, கலப்பட உணவு வகைகள் தயாரித்து விற்பவர்களுக்கு எதிராகக் கடுந் தண்டனைச் சட்டம் · தயாராகின்றதாமே!

ஆமாங்க, சுத்த உணவு மருந்துச் சட்டம் போல இதுவும் அலுமாரிக்குள்ளே உள்ள சட்டமாக இருந்துவிடக் கூடாது!

### அதிக தமிழ் மாணவர்கள் சித்தி அடைவது பற்றி மந்திரி

பல்கலைக் கழக விஞ்ஞானப் பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் கூடுதலாக சித்தியடைவது பற்றி அண்மையில் கல்வி அமைச்சர் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

"மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் முதலிய துறைகளிலான பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் கூடுதலாக சித்தியடைகிறார்கள். தெற்கு ஒரு வரையறை விதிக்கப்படுமா?" என ஒரு ஆங்கிலப் பத்திரிகை நிருபர் கல்வி அமைச்சரைக் கேட்டார்.

"ஒரு மாணவன் கெட்டிக்காரனாக இருக்கிறான் என்றால் அதற்காக ஒரு சமுதாயத்தைக் குறை கூறக் கூடாது. இது கேவல மனப்பான்மையாகும்." என கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அந்த நிருபருக்கு சூடாகப் பதிலடி கொடுத்தார்.

### ஓடும் ரயிலில் தீ பெண் மரணம் 30 பேர் காயம்

நியூயோர்க், ஆக. 1

மான்ஹட்டன் கிழக்கு நதியின் கீழ் சுரங்கப் பாதையில் ஓடிக்கொண்டிருந்த ஒரு ரயிலில் இன்று திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. இதனால் ஒரு பெண் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படும் போது மரணமானார். 30 பேர் காயமடைந்தனர்.

புகையைச் சுவாசித்ததால் இந்த 30 பேரும் சிகிச்சை பெற்றனர்.

சுமார் 75 பேர் ரயிலில் இருந்தனர். (ஐ)



பின்னால் தென்னஞ் சோலை- முன்னால் நின்று தன் அழகைக் காட்டி என்ன சொல்கிறாரோ இந்தக் கன்னிப் பெண் (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிப் பணம் வாழ்க்கையை குலேத்தது

# சகோதரிக்கு சீதனம் கொடுக்கச் சொன்னர்

"கணவர் இல்லாத வேளேயில், எனது மாமனும் மாமியும் என்னேக் கொலே செய்வதாகப் பயமுறுத்தினர். வங்கியில் இருந்த ரூ. 5,000–த்தை எடுத்து, தனது சகோதரிக்கு சீதனம் கொடுக்குமாறு என் கணவர் கேட்டார். நான் மறுத்து விட்டேன்."

நீர்கொழும்பு மாவட்ட நீதவான் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் முன்னிலேயில் விசாரிக்கப்பட்ட விவாகரத்து வழக்கில் ஒரு இளம் பெண் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

மினுவாங்கொடை, தேவல பொலேயைச் சேர்ந்த ஜி. எவ். டபிள்யூ. பெரேரா தனது மனேவி டபிள்யூ. ஏ. சார்லொட் பீரிஸிடமிருந்து விவாகரத்து கோரியுள்ளார்.

சார்லொட் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

"1966 மே மாதம் 23–ம் திகதி திருமணம் நடைபெற்று சந்தோஷமாக வாழ்ந்தோம். மாமன், மாமி குறுக்கிடத் தொடங்கினர். வங்கிப் பணத்தைக் கொடுக்க மறுத்ததால் எல்லோரும் என்னேத் துன்புறுத்தினர். 1968–ல் சுகயீனம் காரணமாக பெற்றேர் வீடு சென்றேன். கணவர் என்னிடம் வருவதில்லே. தாபரிப்பு கோரி வழக்கு போட்டு, நீதானின் ஆலோசனேயின் பேரில் சமாதானமானேம். ஆனல் பின்னும் பிளவு ஏற்பட்டது. எதுவித காரணமும் இன்றி இப்பொழுது கணவர் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார். எனவே விவாகரத்துக்கு நானும் சம்மதம்" என்ருர்.

நீதவான் விவாகரத்தை வழங்கி தீர்ப்பளித்தார். (15)

## ஐ. தொ. கா. தூதுக்குழு பிரதமரை சந்திக்கும்

ஐ. தொ. கா. தலேவரும் நியமன எம். பி. யுமான திரு. ஏ. அஸீஸ் தலேமையிலான தூதுக்குழு ஆகஸ்ட் மாதம் 5–ம் திகதி பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தும்.

புதிய அரசியலமைப்பில் இலங்கை வாழ் சிறுபான்மையினரான இந்திய வம்சாவழியினருக்கு பாதுகாப்பளிக்கும் வண்ணம் எத்தகைய ஷரத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி தோட்டத் தொழிலாளர்கள், இந்திய வம்சாவழியினர் சம்பந்தப்பட்ட முக்கிய பிரமுகர்களும், தொழிற் சங்கங்களும் 2–ம் திகதி காலே 10 மணிக்கு தேயிலேப் பிரசார சபையில்கூட ஐ. தொ. கா. தலேவர் திரு. அஸீஸ் எம். பி. ஏற்பாடு செய்துள்ளார். இக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் பற்றியும், ஆகஸ்ட் மாதம் 4–ம் திகதி இரவு 8 மணிக்கு கூடும் ஐ. தொ. கா. உத்தியோகத்தர்கள் கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களினதும், இந்திய வம்சாவழியினரினதும் பாதுகாப்புகள் உரிமைகள் பற்றி எடுக்கப்படும் முடிவுகளேப் பற்றியும் ஐ. தொ. கா. தூதுக்குழு பிரதமரிடம் பேச்சு வார்த்தை நடத்துமென தலேவர் அஸீஸ் கருத்துத் தெரிவித்தார். (15)

## தொழிற் சங்கங்களில் இன பேதம் கூடாது

கம்பளை; ஆக. 1

"அழுதால் தான் குழந்தைக்குப் பால் கிடைக்கும். அதேபோல தொழிற்சங்கத்தின் மூலமாக எதையும் வற்புறுத்தினல்தான், எந்த அரசாங்கத்திடமிருந்தும் ஏதாவது பெற்றுக் கொள்ள முடியும். பிரச்சினேகளேத் தொழிற் சங்கம் அரசாங்கத்திடம் முன் வைக்க வேண்டும். தானக எதுவும் வராது"

அகில இலங்கை ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர் சங்கத்தின் கம்பளே கிளேயின் பொதுக் கூட்டம், கம்பளே நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. சு. பிரேமசம்பு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு ஜனப் வை. எல். எம். சாதிகீன் தலேமை வகித்தார்.

திரு. பிரேமசம்பு மேலும் பேசுகையில் கூறியதாவது:

தொழிற்சங்கங்களில் ஜாதி, மத, இன, வகுப்பு பேதம் காண்பிக்கக் கூடாது. அப்படி வித்தியாசம் காட்டுவது தொழிலாள வர்க்கத்திற்கு நன்மையைத் தராது. ஸ்தல ஸ்தாபனத் தொ[illegible]லாளர்களே ஏதோ குறைந்த ரகமானவர்களாகக் கருதிக் கொள்வது தவறுகும். தொழில் என்பதில் கூடுதல் அல்லது குறைவு என்று ஒன்றில்லே. பெருமை சிறுமை இல்லே. ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர்கள் நாட்டுக்கும் சமூகத்துக்கும் சேவை செய்பவர்கள்" என்ருர்.

## 175 பேர் பலி!

டெஹ்ரான், ஆக. 1

ஈரானில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் கொல்லப்பட்டவர்களின் தொகை 175 ஆக அதிகரித்துள்ளது.

இடிபாடுகளுக்கு இடையில் மீட்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

வடகிழக்கு ஈரானில் ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்ச்சியினல் 31 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இதுவரை 450 பேர் காயம் அடைந்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் மற்றும் நிவாரண ஸ்தாபனங்களும் அறிவித்து உள்ளன. (5)


### உதவுவார்கள் தானே;

மலேஷியா, ஜப்பான், ஈராக், ரஷ்யா, ஸ்கன்டினேவியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, யூகோஸ்லேவியா, இந்தியா, போர்த்துக்கல் முதலிய நாடுகளின் தின்பண்டங்களே வாங்கி அருந்தி ருசிபார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இங்கு நாம் குறிப்பிடுவது கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச உணவுக் கண்காட்சியையேயாகும். புற்று நோயாளர்களுக்குக் கண்டியில் ஒரு விடுதியை நிறுவுவதற்காகவே இக் கண்காட்சியை நடாத்துகின்றர்கள். எனவே அரிசிப் பொரியோடு திருவாரூர் என்ற முறையில் இதுவரை தின்னத தின்பண்டங்களேத் தின்பதற்குக் கொடுக்கும் பணம் புற்றுநோய் இல்லத்திற்கு வேண்டிய ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு ஒரு பகுதியைக் கொடுப்பதுமாகும். பயன்தரும் செயலுக்கு மக்கள் உதவுவார்கள்தானே.

தந்தி


## பணிப்பெண் மீது பலாத்காரம்

அவள் ஓர் இள மங்கை. பார்ப்போர் மனதைக் கொள்ளே கொள்ளும் பருவ மங்கை. பணிப் பெண்ணுக பணியாற்றி வந்தாள் இலங்கை இராணுவ கேணல் ஒருவர் வீட்டில். அருகில் உள்ள மற்ருேர் கேணல் வீட்டில் முட்டை ஒன்று வாங்கிவரும்படி அனுப்பினுள் அவளின் எஜமானி. ஆனல் முட்டை வாங்கப் போனவள் மீது பலாத்காரம் புரிந்தாளும் அவ் வீட்டிலிருந்த சின்ன எஜமான்.

பனுகொட இராணுவ முகாமைச் சேர்ந்த எல். பி. பெர்னண்டோ என்பவர் மீது சென்ற பெப்ரவரி மாதம் பனுகொட இராணுவ முகாமுக்குச் சொந்தமான வீடொன்றில் வைத்து யு. ஜி. சிறியாவதி என்பவர் மீது பலாத்காரம் பிரயோகித்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணேக்கு எடுக்கப்பட்டது.

கொழும்பு தெற்கு மேலதிக நீதவான் திரு. ஜி. எவ். எச். அத்துறுபான முன்னிலேயில் விசாரணேக்கெடுக்கப்பட்ட இவ்வழக்கில் முடிக்குரிய தரப்பு சாட்சியான திருமதி ஜன்சன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:– எனது கணவர் ஓர் இராணுவ கேணல். எமது வீட்டிற்கு அண்மையில் வசித்து வந்த இன்னுமோர் கேணல் வீட்டில் எதிரி வசித்து வந்தார். முறைப்பாட்டுக்காரரான சிறியாவதி எனது பணிப் பெண்.

சம்பவம் நடந்த தினம் முட்டை ஒன்று வாங்குவதற்காக சிறியாவதியை கேணல் பெர்னண்டோ வீட்டிற்கு அனுப்பினேன். அவள் கெதியில் வருவதாகக் கூறிச் சென்ருள். ஆனல் அவள் வருவதற்கு தாமதித்தமையால், நான் அவளது பெயரை சொல்லி கூப்பிட்டேன்.

சிறிது நேரத்தின்பின்னர் சிறியாவதி ஓடிவந்து கேணல் பெர்னண்டோ வீட்டிலுள்ள சின்ன எசமான் தன் மீது பலாத்காரம் புரிந்தார் என அழுத வண்ணம் கூறினுள். எதிரியையே அவள் சின்ன எசமான் எனத் தெரிவித்தாள்.

நான் இவ் விடயத்தை எனது கணவருக்குத் தெரிவித்தேன். பின்னர் இதுபற்றி விசாரிப்பதாக எதிரியின் வீட்டிற்குச் சென்ருேம். அங்கு ஒருவரும் இல்லே. அதனல் பொலீஸில் முறைப்பாடு செய்தோம்.

இந் நிலேயில் மறு விசாரணே ஆகஸ்ட் மாதம் 26–ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (–7)

## அஸீஸ் தெரிவு

ஐ. தொ. கா. தலேவரும், நியமன எம்.பியுமான ஜனப் ஏ. அஸீஸ் அவர்கள் தொழில், நிதி, தோட்டத்துறை ஆகிய அமைச்சர்களுக்கான ஆலோசனேக் குழுக்களுக்கு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## விழுந்து மரணம்

இளநீர் பிடுங்க தென்னே மரத்திலேறிய 13 வயதுப் பையன் கைதவறிக் கீழே விழுந்து, கடும்காயம் ஏற்பட்டு மரணமடைந்தான்.

கம்பொல, பாகல என்ற இடத்தைச் சேர்ந்த ஆர். ஜெயரெட்ன என்றவரே மரணமடைந்தவராவார். (–7)

## பலாத்கார வழக்கில் டாக்டர் விடுதலே

பதினேந்து வயதுப் பருவப் பெண் மீது பலாத்காராம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரியான டாக்டர் விடுதலே செய்யப்பட்டார்.

வெள்ளவத்தை, அனுலா ரேட்டைச் சேர்ந்த டாக்டர் ஆர். ஜே. ஜி. சங்கர் என்பவர் மேரி திஸ்ஸேரு என்ற பணிப் பெண் மீது பாலத்காரம் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டார். கொழும்பு தெற்கு மாஜிஸ்ரேட் நீதிமன்ற நீதவான் திரு. கொலின் மென்டிஸ் முன்னிலேயில் நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரிக்கப்பட்ட போது மேற்படி டாக்டர் விடுதலே செய்யப்பட்டார்.

வெள்ளவத்தைப் பொலீசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கு விசாரணேக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வெள்ளவத்தை பொலீஸ் நிலேய இன்ஸ்பெக்டர் திரு. கே. ஏ. என். சி. பெரேரா, வழக்கைத் தாங்கள் தொடர்ந்து நடாத்த விரும்பவில்லே எனத் தெரிவித்தார். நீதவான் சந்தேக நபரை விடுதலே செய்தார்.

பிரதிவாதியான டாக்டர் சங்கர் தரப்பில் வழக்கறிஞர் திரு. யு. நாகராஜா வழக்கை நடாத்தினுர். (–7)

## காணமற்போன பெயின்ட் டின்கள்

அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான உயர்ந்த ரக "பெயிண்டுகள்" பெருமளவில் மறைந்ததன் மர்மம் என்ன?

இவ்வாறு கேள்விக்கணே தொடுத்துள்ளார் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் அத்துடன் இது பற்றி உடனடியாக விசாரணே நடாத்தும்படி கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தொழிற் சங்கமொன்று அமைச்சருக்கு தெபற்றிச் செய்து கொண்ட ஒரு முறைப்பாட்டைத் தொடர்ந்தே அமைச்சர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு வாரத்திற்கு முன்னர் காணமல் போன இந்த பெயிண்ட் சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளேயும் மேற்கொள்ளாததையிட்டு அமைச்சர் ஆச்சரியம் தெரிவித்தார்.

ஒவ்வொன்றும் ரூ. 56 ரூபா பெறுமதி வாய்ந்த 50 ஏழு கலன்கொண்ட பெயிண்ட் டின்கள் காணமல் போய்விட்டதாகவும், இதுவரை அவற்றைக் கண்டு பிடிப்பதற்கு கூட்டுத்தாபனம் எதுவித நடவடிக்கைகளேயும் மேற்கொள்ளவில்லே எனவும் தொழிற் சங்கம் ஒன்று புகார் செய்தது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாலு வயதுப் பருவப் பெண்

# கடத்திசெல்லப்பட்டாள்: ஆனால் கெடுக்கவில்லை

"இளம் பெண்ணை எதிரி இரண்டு நாட்கள் தனிமையில் வைத்திருந்தார். ஆனால் அவளுக்கு எதுவித கெடுதலும் செய்யவில்லை. அவரின் பெற்றோர் சம்மதித்தால் அவளை மணக்கச் சம்மதிக்கிறார். அவள் எழுதிய காதல் கடிதங்கள் பல அவரிடம் உண்டு."

பெண் கடத்து வழக்கில், வழக்கறிஞர் திரு. டேவிட் அமரவிக்கிரமா இவ்வாறு கூறினார்.

ஹெந்தலை, திம்பிரிகஸ்யாயைச் சேர்ந்த கே. கணபதியின் மகள் சரஸ்வதி 14 வயது மைனர் பெண். இவளைக் கடத்திச் சென்றதாக வத்தளை, கெரலப்பிட்டியைச் சேர்ந்த ஏ. அப்புவா என்பவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. நந்தா விஜயசேகரா முன்னிலையில் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டது.

இளம் பெண்ணின் தந்தையான கணபதி ஜுலை 19-ம் திகதி தனது மகளைக் காணவில்லை என்று பொலீசில் முறைப்பாடு செய்தார். ஏ. அப்புவா என்பவரே தன் மகளைக் கடத்தியுள்ளதாகப் புகாரில் குறிப்பிட்டார்.

ஜுலை 20-ல் எதிரியும் இளம் பெண்ணும் பொலீசில் சரணடைந்தனர். இருவரும் ஆஜராக்கப்பட்டு, சரஸ்வதியை பெற்றோருடன் செல்ல உத்தரவிடப்பட்டது. எதிரி ரூ. 750 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேல் விசாரணை செப்டம்பர் 6-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (15)

## கழுத்தில் இரத்தம் வடிய கீழே கிடந்தார் தந்தை

வீட்டை நோக்கி கல் வீசப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர், எனது தந்தையார் அபயக் குரல் எழுப்புவதைக் கேட்டேன். உடனே நான் மலையை நோக்கி ஓடினேன். தேயிலைத் தோட்டத்தின் நடுவே கழுத்தில் இரத்தம் ஓட அவர் விழுந்து கிடப்பதைக் கண்டேன். தந்தையாரின் தலையைத் தூக்கிப் பிடிக்க நான் முயற்சித்த போது பிரேமவதி வாள் ஒன்றினால் என்னை வெட்டினாள்.

இரத்தினபுரி நீதவான் திரு. ஸ்ரீலால் பெரேரா முன்னிலையில் எடுக்கப்பட்ட வழக்கொன்றில் சாட்சியமளித்த ஆர். கே. சிறிசேன என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருவித்த பொலீஸ் பகுதியைச் சேர்ந்த கலுகம என்ற இடத்தில் சென்ற மார்ச் மாதம் 10-ம்திகதி ஆர். கே. புஞ்சியப்புகாமி என்பவரைக் கத்தியாலும், வாளாலும் தாக்கிக் கொலை செய்ததாக பி. ஜினதாச, வி. சிறில், எம். பியதாச, ஆர். கே. டிங்கிரி மகாத்மயா, ஜி. பிரேமதாச ஆகிய ஐவர் மீதும் இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிறிசேன தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:– இறந்தவர் எனது தந்தை. எதிரி எனது மாமன். இருவருக்கும் இடையே வெகுநாளாகக் குரோதம் உண்டு.

எதிரியும் தந்தையாரும் அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வந்தார்கள். நான் எனது மனைவியுடன் சற்றுத் தள்ளி வசித்தேன்.

சம்பவம் நடந்த தினம் பொலீசார் பிரேமவதி வீட்டின் மேல் கல் எறிந்ததாக என்னை எச்சரித்திருந்தார்கள். பொலீசார் சென் உடனே எதிரி எனது தந்தையார் வீட்டிற்கு கல்லால் எறிந்தார். அந்நேரம் எனது தந்தையார் வீட்டில் இல்லை.

தேயிலைத் தோட்டத்தின் பக்கம் இருந்து எனது தந்தையாரின் அபயக் குரல் எனக்குக் கேட்டது. அத்திசையில் ஓடிச் சென்று என்ன நடந்தது என அவரிடம் கேட்டேன். அவர் அப்போது பேச முடியாத நிலையிலிருந்தார்.

அவரது கழுத்தில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அப்போது எனது இளைய சகோதரியும் அங்கு வந்து சேர்ந்தாள். அதைத் தொடர்ந்து எதிரி பிரேமவதி வாளுடன் அங்கு வந்து என்னைத் தாக்கினாள்.

இந்நிலையில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (7)

## கையிலிருந்த நூறு ரூபா பறிக்கப்பட்டது

நூறு ரூபா திருட்டு ஒன்று சம்பந்தமாக பதுளைப் பொலீசார் ஓர் கணவன்—மனைவியைத் தேடி வருகின்றனர். பதுளையைச் சேர்ந்த எஸ். எம். ஜோபிஸ் என்பவரே இப் பணத்தைப் பறிகொடுத்தவராவார்.

பதுளையில் உள்ள கடையொன்றில் சாமான்கள் வாங்கிய பின்னர் பணம் கொடுப்பதற்காக நூறு ரூபாவைக் கையிலெடுத்த போது யாரோ ஒரு நபர் பறித்துக் கொண்டு ஓடிவிட்டதாக இவர் பொலீசில் புகார் செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து பொலீசார் நடாத்திய விசாரணையில் ஓர் கணவனும் மனைவியும் சந்தேகத்திற்குரிய நூறு ரூபா நோட்டை கூட்டுறவு ஸ்தாபனத்தில் மாற்றியதாக கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. அதைத் தொடர்ந்து அந்தச் சோடியைத் தேடுவதில் பதுளை பொலீசார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (7)

## விவாகப் பதிவுடன் விவாகம் முறிந்தது

கடதாசியில் போட்ட கை எழுத்துடன் கல்யாணம் முறிந்த சம்பவம் ஒன்றை 28 வயது அழகி சோகத்துடன் கூறினாள்.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதவான் திரு. எவ். ஏ. சோஸா முன்னிலையில் எடுக்கப்பட்ட வழக்கொன்றில், இராஜகிரியைச் சேர்ந்த ஆர். ஏ. அசோகா ரணசிங்கா என்னும் பெண் தன் சோகக் கதையைக் கூறினாள்.

24 வயதில் பி. டொன் பியசிறி ஜயசேகராவுக்கும் எனக்கும் கொழும்பு கச்சேரியில் விவாகப் பதிவு நடைபெற்றது. திரும்பி வருவேன் என்று அன்று கூறிச் சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லை.

விவாகப் பதிவு முடிந்தவுடன் நாங்கள் எங்கள் பெற்றோர் வீட்டுக்குச் சென்றோம். ஒன்றுகூடவே இல்லை. திருமணமும் நடைபெறவில்லை என்று கூறினார்.

தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. (15)

## சிஹானுக்கின் நம்பிக்கை

ஹாங்காங், ஆக. 1

கம்போடியாவில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கையை இளவரசர் சிஹானுக் இன்னும் இழந்து விடவில்லை என்று தென் சீன பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்களைக் கவிழ்ப்பதற்காக வட மேற்கு கம்போடியாவில் உள்ள இரகசிய இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதாக அந்தப் பத்திரிகை மேலும் அறிவித்துள்ளது. (5)

## முரண்பட்ட சாட்சியம்: எதிரி விடுதலையானார்

"முடிக்குரிய தரப்புச் சாட்சி முக்கிய நிகழ்ச்சிகளை முன்னுக்குப் பின் முரணாகக் கூறியுள்ளார். இதனாலேயே ஜுரர்கள் இம் முடிவுக்கு வந்துள்ளனர்."

கொழும்பு அசைஸ் கமிஷனர் திரு. ஈ.ஆர். டி. பொன்சேகா முன்னிலையில் எடுக்கப்பட்ட ஓர் வழக்கில் எதிரியான சி. ரி. சமரசிங்க பெரேரா என்ற வாலிபரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜுரிமார்கள் எதிரி சுற்றவாளியென ஏகமனதாக முடிவு செய்ததையடுத்து நீதவான் எதிரியை விடுதலை செய்தார்.

51 வயதான டி. ஜே. அப்புஹாமி என்பவரை சென்ற 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி பொரு விஸ்ரா கார்டினில் வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்ய முயன்றதாக எதிரி மீது இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது அப்புகாமி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:– சம்பவ தினம் நான் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது, எனது மனைவியான கேர்லி டயஸை எதிரியும், அவரது சகோதரன், தகப்பன் ஆகியோர் தாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனே நான் ஓடிச் சென்று மூவரையும் தாக்கினேன். அவ்வேளையில் எதிரியான பெரேரா மேசைக் கத்தி ஒன்றால் என்னைக் குத்தி விட்டார்.

சாட்சி பொலீசாருக்கு அளித்த வாக்குமூலத்திலும் இங்கு அளிக்கும் சாட்சியத்திலும் பல முரண்பாடுகள் காணப்படுவதாக முடித்தரப்பு வழக்கறிஞருக்கு நீதவான் சுட்டிக் காட்டினார்.

சாட்சியின் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்ற நீதவானின் கருத்தை முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக் கொண்டார். (7)

## பிஹாரில் பெரும்வெள்ளம்

பட்னு, ஆக. 1

பீஹாரின் வட பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 2,500 கிராமங்களைச் சேர்ந்த 26,000,00 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக இருந்து வரும் அந்த வெள்ளப் பெருக்கினால் இதுவரை மூன்று லட்சம் மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளாயினர்.

பிரமபுத்திரா நதி பெருக்கெடுத்ததைத் தொடர்ந்து அசாமில் உள்ள தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. அசாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இதுவரை 8 பேர் மாத்திரம் கொல்லப்பட்டனர். 8 கோடி ரூபாவுக்குச் சேதம் ஏற்பட்டு உள்ளது.

கங்கை நதியின் கிளை ஆறான அலாக்னந்தா பெருக்கெடுத்ததைத் தொடர்ந்து ஹிமாலயப் பகுதியில் பெரும் அழிவு ஏற்பட்டு உள்ளது. (5)


### அழகிய பிரசியர் அணிந்து

கவர்ச்சியுடன் திகழுங்கள்



கூட்டிக் குறைக்கும் வசதியுடைய "கப்" இணைந்த எலாஸ்டிக் பட்டிகளைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட புடவைகளின் மூலம் இந்த அழகிய பிரசியர் தைக்கப்படுகின்றது. எந்தவொரு பண்டிகைக்கும் அணியக்கூடிய விதத்தில் இதமாகவும் சொகுசாகவும் இருக்கும். இந்த பிரசியர் உங்கள் அழகிற்கு மெருகேற்றி, சௌகரியம் தருகின்றது. முனைப்பகுதி வளைவில் இறுக்கமோ வசதியின்மையோ இன்றி சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் உடலுக்கு சரியாக அமையாதா என்னும் கவலை இல்லை. வெள்ளை, றோஸ், கறுப்பு ஆகிய 3 நிறங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். [நிறத்தைக் குறித்து எழுதவும்].

முற்றிலும் புதிய பாணி. அதுதான் இந்த அழகிய பிரசியர். உங்கள் அளவைக் குறித்து இன்றே எமக்கு எழுதுங்கள். விலை ரூபா 5/50. தபாற் செலவு இலவசம்.

வி. பி. பி. ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனஸ்கோ ஏஜென்ஸீஸ், (TH)**

191/1, ஹைலெவல் வீதி, கொழும்பு 6.



### அன்பும் காதலும்

நிரந்தரமாவதற்கு, வேண்டியவர்களை அடைவதற்கு, வேண்டாதவர்களை தவிர்ப்பதற்கு, திருமணம் நடைபெறுவதற்கு, கொடியவர்களை அடக்குவதற்கு, பரீட்சைகளில் சித்தியடைவதற்கு, வழக்கு என்பனவற்றில் வெற்றியடைவதற்கு, நோய் பீதி ஒழிந்து, முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுக்கப்படும்.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற குப்த விஞ்ஞானீ

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீசங்கரஜ மாவத்தை, மருதானை.

தொலைபேசி: 33955.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைத் தேருக்குத் தீ ஐயோ முருகா ஓலம்

மாவிட்டபுர கந்தசுவாமி கோவில், தண்டேசுவரர் தேர் தீப்பற்றி எரிந்தது. பெண்கள், பிள்ளைகள், முதியோர் "ஐயோ முருகா, ஐயோ முருகா" என ஓலமிட்டனர்.

வெள்ளிக்கிழமை, தண்டேசுவரர் தேரைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த தென்னோலையில் தீ பற்றியது. தீ விபத்தினல் தண்டேசுவரர் தேருக்கு பெருஞ் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆனல் முருகனின் அலங்காரத் தேர் காப்பாற்றப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தேரில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. என். பி. என். நாகரத்தினத்தைப் பொலீஸார் தேடி வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

தீ அணைக்கப்பட்ட பின்னர் கோயில் வீதியில் கூடி நின்ற இரு கோஷ்டிகளுக்கிடையில் மூண்ட கலவரத்தை அடக்குவதற்காகப் பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

கோயில் வீதியில் நடைபெற்ற சம்பவங்கள் சம்பந்தமாக எஸ். சங்கரவடிவேல், பொன்னுச்சாமி ஐயர், ஐ. இந்துமதி ஆகியோர் காங்கேசன்துறைப் பொலீஸுக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இவர்கள் பொலீஸுக்கு அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்தே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவரைப் பொலீஸார் தேடி வருவதாகக் கூறப்படுகிறது.

கோயில் தேரில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவத்தை தொடர்ந்து யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் ஸ்தலத்துக்கு விரைந்து வந்து நிலைமையை அவதானித்தார். பொலீஸ் உயர் அதிகாரிகள் பலர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தனர்.

தேரில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவம் பற்றி உடனடியாக விசாரணை செய்யும்படி வேதாகம சைவ சிந்தாந்த சபை, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், பொலீஸ் மா அதிபருக்கும் அவசர தந்தி அனுப்பி உள்ளது.

கோயில் வீதியில் கைக்குண்டு ஒன்றும் வீசப்பட்டது.

மாவை முருகன் மயிலாசனத்தில் அமர்ந்து தீர்த்தமாடுவதற்கு கீரிமலைக்குப் புறப்படுவதற்கு முன்னர் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

கீரிமலையில் சகல வைபவங்களும் மிகவும் அமைதியாக நடைபெற்றன. முருகப் பெருமானின் மயிலாசனத்தைச் சூழ்ந்தபடி சுமார் 100 பொலீஸார் சென்று கொண்டிருந்தனர்.

கோயிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து மாவிட்டபுரத்துக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் சிறு, சிறு அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை செனட்டர் நடராசா, எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரின் வீடுகள் மீது எறிகுண்டு வீசப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.



தீர்த்தமாடுவதற்குச் சுவாமி வெளியே கொண்டு வரப்பட்டதும் கோயிலின் கிழக்கு வாசல் இரும்புக் கேட் மூடப்பட்டது. அந்த கேட் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளே பூசைகள் நடந்தன. வெளியிலிருந்து அர்ச்சனைத் தட்டுகள் கேட்டில் உள்ள ஜன்னல் ஊடாகக் கொடுக்கப்பட்டன. ஹரிஜனர்களும் கொடுத்தார்கள்.

நேற்று முன்தினம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா தினமாயினும் அத்திருவிழா நடைபெறவில்லை.

## இன்று வரவேற்பு

இலங்கை அரசைப் பாராட்டவும் இங்கு வந்துள்ள அல்பதாஹ் விடுதலை வீரர்களை வரவேற்கவும் இன்று பிற்பகல் கொழும்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

இஸ்ரவேலுடனை தொடர்பை இலங்கை அரசு துண்டித்ததை அடுத்து முஸ்லிம் மக்கள் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற உப சபாநாயகர் ஜனாப் ஐ. ஏ. காதர் தலைமையில் இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு சென்ட்ரல் ரோட் பள்ளிவாசல் தெருச் சந்தியில் இப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

## அம்மானில் ஆர்ப்பாட்டம்

அம்மான், ஆக. 1

மத்திய கிழக்கு சம்பந்தமான அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை ஆட்சேபித்து ஜோர்டானின் தலைநகரான அம்மானில் 20,000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தில் பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தைச் சேர்ந்த கெரில்லாக்கள் பெரும் அளவில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கெரில்லாக்களில் சிலர் தமது காரில் இயந்திரத் துப்பாக்கிகளையும் பொருத்தி இருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் பின்பு இதற்கு அனுமதி அளிக்கவில்லை.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்ற பாதையில் இருந்த கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. (5)

## "நாடு கடத்தும்" வேலை துரிதமாகும்

ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியப் பிரஜா உரிமை கோருபவர்களை தாய்நாட்டுக்கு அனுப்பி வைக்கும் வேலைகள் துரிதமாக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முழுச் சக்தியையும் முடுக்கிவிடும்படி பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்கா தனது அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற உயர்தர அதிகாரிகள் மாநாட்டில் இந்த வேலைகள் தாமதமாவதற்கு காரணம் ஊழியர் சேமலாபநிதி விண்ணப்பங்களைக் கையாளப் போதியளவு ஊழியர்கள் இல்லாததேயாகும். எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனல் இந்த வேலைகளைக் கவனிக்கவெனத் தனிப் பிரிவு ஒன்றை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (ம)

## குழு நியமனம்

யுனெஸ்கோவின் இலங்கைத் தேசிய ஆணைக்குழுவுக்கு 27பேரை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதின் மஹ்முத் நியமித்துள்ளார்.

இந்தக் குழுவின் தலைவராக கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பிரேமதாச உடாகம இருப்பார். (ம)

## ராஜினமா

திரு. அச்சுதமேனன் தலைமையிலான கேரள மந்திரி சபை இன்று ராஜினமா செய்தது.

கடந்த ஒன்பது மாதங்களாக பதவியிலிருந்த தனது மந்திரிசபையின் ராஜினமாவை திரு. அச்சுதமேனன் கேரள கவர்னர் திரு. விஸ்வநாதனிடம் ஒப்படைத்தார். (ம)


## மின்னுவதெல்லாம் பொன்னல்ல!

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3–25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7–50

வி- பி- பி- டைர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி பெற்றோரின் விருப்பம். நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.



## கோபால் பல்பொடி




பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கபபடுகிறது

**அன் கோ.**

மதுரை - கொழும்பு

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

**S. P. S. ஜெயம்**

தபால் பெட்டி 1298.
தொலைபேசி எண்: 26584


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்டது: தந்தி, 2 ஆகஸ்ட் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org